# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தம்)

***1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள்
சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் 2013, ஏப்பிறல் மாதம் 24 ஆம்
திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***235 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007184-650 (2013/04)

## ***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *1992* ஆம் ஆண்டின் *33* ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் *28* ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நிர்மாண நோக்கங்களுக்காக எந்தக் கனிப்பொருட்களை இடம்பெயர்ப்பதற்கு உரிமமொன்று தேவையாகவுள்ளதோ அந்தக் கனிப்பொருட்களை அமைச்சர் விதித்துரைப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்குமானதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *33* ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, உரிமமொன்றைப் பெறுவதற்கு அமைச்சரின் அங்கீகாரம் தேவையாகவுள்ள ஒதுக்கப்பட்ட கனிப்பொருட்களை விதித்துரைப்பதற்குமானதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் *64* ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, எந்தப் புதிய இருபந்திகள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கக்கூடுமோ அந்தப் புதிய இருபந்திகளைச் சேர்ப்பதற்குமானதாகும்.

ச.வ.ஓ-18/2012

## 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவு (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

> "(5) இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அமைச்சர், காலத்துக் குக்காலம், பணியகத்தின் எழுத்திலான விதப்புரையுடன், நிர்மாண நோக்கங்களுக்காக எந்தக் கனிப்பொருட்களை இடம்பெயர்ப்பதற்கு உரிமமொன்று தேவையாகவுள்ளதோ அத்தகைய கனிப்பொருட்களை விதித்துரைக்கலாம்.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கதிரியக்க அம்சங்களைக் கொண்டுள்ள கனிப்பொருட்களையும், பவளத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கதிரியக்க அம்சங்களைக் கொண்டுள்ள கனிப்பொருட் களையும், இல்மினைட்டையும், ரூட்டைல்லையும், சேர்க்கொன்னை யும், கார்னட்டையும், மொனசைட்டையும், பவளத்தையும்" என் னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2-PL 007184 -225(2013/03)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியில், ''இணங்கியொழுகுவதற்கான முறையும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இணங்கியொழுகுவதற்கான முறையும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ங) நிர்மாண நோக்கங்களுக்காகத் தேவையாகவுள்ள கனிப்பொருட்களைக் குறித்துரைத்தல் ; அத்துடன்

(ச) உரிமமொன்று தேவையாகவுள்ள கனிப்பொருட்களை இடம்பெயர்ப்பதற்கான கொள்ளளவும், மார்க்கமும் மற்றும் முறைமையியலும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்